EST/8/ALOWN/05/0037 - 1

செயலாளர்

கல்வி அமைச்சு

**கணினி இன்ரநெற் திருத்தியமைத்தல் தொடர்பான வீதத்திற்கு அனுமதி பெற்றுக்கொள்ளல்**

தங்கள் சம இலக்கங்கொண்ட 2011.02.24 திகதியிட்ட கடிதம் தொடர்பாக

02) தேசிய சம்பளமும் ஆளணியும் ஆணைக்குழுவில் சிபார்சைக் கருத்திற் கொண்டு கணினி மற்றும் இன்ரநெற் பராமரிப்புச் செயற்பாட்டில் கடமை புரியும் அலுவலர்க்கு வேறு எந்தக் கொடுப்பனவுகளும் செய்யப் படாத விடத்து கீழே குறிப்பிடப் பட்டபடி படிகள் கொடுப்பனவு செய்வதற்கு அனுமதி அளிக்கிறேன்.

1.வன்பொருள் குழுவில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கட்கு ஒரு மாவட்டத்திற்கு அதிக பட்சம் 04 நாட்கள் வீதம் மாவட்டம் 25 க்காக( வருடத்திற்கு அதிக பட்சமாக 100 நாட்கள் )

நாளொன்றிற்கு எட்டு மணித்தியாலங்கட்கு மேற்பட்ட சேவை - ரூ.1,000/=

நாளொன்றிற்கு நான்கு மணித்தியாலங்கட்கு மேற்பட்ட சேவை ரூ.500/=

2.இணைப்பாளர் செயற்பாடுகள் தொடர்பாக (ஒரு அலுவலர் மட்டும்) ஒரு அலுவலருக்கு ஒரு மாவட்டத்திற்கு ஒரு நாள் மட்டும் ரூ.1,000/=

03) உரிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடமையானது மற்ற அலுவலர்களினதும் கடமைக் கூறின் ஒரு பகுதியாக இருக்கின்ற படியால் இதற்காக மேலதிக படிகள் கொடுப்பதை அனுமதிக்க முடியாது இருப்பதுடன் எனது சம இலக்கம் உடைய 2011.02.10 திகதியிட்ட கடிதம் இத்துடன் செல்லுபடி அற்றத ஆக்குவதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டபிள்யு. டீ. சோமதாஸ

தாபனப் பணிப்பாளர்

தாபனப்பணிப்பாளர் நாயகத்திற்காக

பிரதி:-

1.கணிக்காய்வாளர் நாயகம்

2.செயலாளர், தேசிய சம்பளமும் ஆளணியும் ஆணைக்குழு - தங்கள் இலக்கம் NSCC/I/34/A உடைய 2011.03.25 நாள் கடிதத்திற்கு அமைவாக – தெரியப்படுத்துவதற்கு

ED/01/26/07/01/01
2011.05.16

மாகாணக்கல்விப் பணிப்பாளர்
மாகாண கல்வித்திணைக்களம்
வடக்கு

**கணினி வன்பொருள் வலையமைப்பு திருத்தி அமைத்தல் தொடர்பான வீதத்ததிற்கு அனுமதி பெற்றுக்கொள்ளல்**

இவ் அமைச்சினால் எல்லா வலயங்களையும் உள்ளடக்கும் வகையில் ஆசிரியர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கணினி வன்பொருள் , வலைப்பின்னல் திருத்தக் குழு செய்யும் சேவைக்காக அச் செயற்பாடுகளில் ஈடுபடும் சமயங்களில் அவர்கட்கு அவர்கள், செய்யும் கருமம், நேரம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக கல்வி அமைச்சினால் செய்யப்பட்ட வேண்டுகோளின் படி அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் இல. EST/8/ALOWN/05/0037 – 1 கொண்ட 2011.04.05 திகதி இடப்பட்ட கடித்தில் குறிப்பிடப்பட்டவாறு கொடுப்பனவு செய்வதற்கு அனுமதியளிக்கப்ட்டுள்ளது. (இத்துடன் இணைக்கப்பட்டள்ளது).

அதன் படி இந்த பராமரிப்பு நடவடிக்கை நடைபெறும் சந்தர்ப்பங்களின் போது இதை அடிப்படை ஆகக் கொண்டு செயற்பாட்டை நடைமுறைப்படுத்தும் படி தயவாகக் கேட்டுக் கொள்வதுடன் அதி உயர்ந்ததும் திறமை மிக்கதுமான சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக இதைப் பயன்படுத்துவீர்கள் என உறுதியாக நம்புகின்றேன்.

ஜீ.எம்.நீல் குணதாஸ
கல்விப் பணிப்பாளர்
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்

பிரதி:- 01. மாகாண தகவற் தொழிநுட்ப இணைப்பாளர் - தெரியப்படுத்துவதற்காக